**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 04-ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் ஐப்பசி மாதம் 18-ம் நாள்திங்கள்கிழமை

இ.ம.எண்.02/2022 ன் அ.வ.எண்.172/2014

1) ராமகிருஷ்ணன்

2) அன்னக்கிளி ... மனுதாரர்கள் /4,5 பிரதிவாதிகள்

/எதிர்/

1) நதிப்பாறை அய்யா நாராயணசுாமி நிழல்தாங்கல்
அதன் தர்மகர்த்தா தாசன் மூலம்

... 1 வது எதிர்மனுதாரர்/வாதி

2) தமிழ்நாடு மின்சார வாரியம்,
திருநெல்வேலி மின் திட்டம், (விநியோகம்)
பணகுடி அதன் இளநிலை மின்பொறியாளர் மூலம்

3) பணகுடி தேர்வுநிலை பேரூராட்சி,
அதன் செயல் அலுவலர் மூலம்

4) செல்லத்துரை

5) தங்கையா

6) அருணா ... 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3,
6,7 பிரதிவாதிகள்

இம்மனுவானது 23.10.2024 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.. சுபாஷ் தங்கத்துரை அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.இராவணசிவன்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:30:51 +0530

அவர்கள் ஆஜராகியும், 2,3 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசாங்க வாதுரைஞர் திரு.V.முத்துகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 4,6 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், இருதரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

இம்மனுவானது அசல் வழக்கில் 16.11.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து பிரதான வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1510 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டி பிரிவு 5-ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுவின் சுருக்கம்**:

அசல் வழக்கில் பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 16.11.2017 ல் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பகரப்பட்டது. உண்மையில், அசல் வழக்கு கட்டு 7ம் பிரதிவாதியிடம் மனுதாரர்களின் வழக்கறிஞர் மூலம் தேவையான அனைத்து ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒப்படைக்கப்பட்டது. எங்கள் முந்தைய வழக்கறிஞருக்கு தேவையான அனைத்து சங்கதிகளையும் அவர் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை கட்சி சேர்க்க மனு தாக்கல்இந்நிலையில், அசல் வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை சாதகமாகப் பயன்படுத்தி, இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக சிமெண்ட் தூண்களை அமைத்து அடைத்து வருகின்றனர். 16.11.2017 தேதியில் எதிர்வழக்குரை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:31:00 +0530

தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல. அசல் வழக்கில் மனுதாரர்களுக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே, அசல் வழக்கில் 16.11.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து பிரதான வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 1510 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2)1 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வழக்குரை தாக்கல் செய்த காலம் முதல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட காலம்வரை 3 வருட காலமாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததற்கு எவ்வித காரணமும் கூறப்படவில்லை. அதுபோல் தற்போதும் கூட மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்களுடன் கூட எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர்களுக்கு வழக்கில் நல்லதொரு நிலைப்பாடு இல்லாததாலேயே எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வரவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3) 2,3 வது எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் எக்ஸ்பார்ட்டி ஆகியுள்ளார்கள். அதனற்கு காலதாமதம் 1500 நாட்கள் ஆகியுள்ளளது. அதற்கு சரியான விளக்கம் எதுவும் அபிடவிட்டில் கூறவில்லை. மனுதாரர்கள்/ 4,5 பிரதிவாதிகள் எதற்காக வழக்கறிஞரை சந்திக்கவில்லை என்பதற்கும் எதற்காக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பதற்கும் சரியான விளக்கம் கூறவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:31:08 +0530

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

4) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 16.11.2017 ல் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பகரப்பட்டது. உண்மையில், அசல் வழக்கு கட்டு 7 ம் பிரதிவாதியிடம் மனுதாரர்களின் வழக்கறிஞர் மூலம் தேவையான அனைத்து ஆவணங்களையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒப்படைக்கப்பட்டது. எங்கள் முந்தைய வழக்கறிஞருக்கு தேவையான அனைத்து சங்கதிகளையும் அவர் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது. 16.11.2017 தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல என காரணம் தெரிவித்துள்ளார். ஆனால், மனுதாரரால் கூறப்படும் காலதாமதத்திற்கான காரணம் குறித்து எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும், அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்காகவும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். ஆகவே இம்மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்கள் எந்த பாதிக்கும் உள்ளாகமாட்டார்கள்.

இறுதியாக, இம்மனுவானது ரூ.4,000/- (ரூபாய் நான்கு ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் ரூ.3,000/-த்தை 1வது எதிர்மனுதாரருக்கும், ரூ.1,000/-த்தை 2,3 எதிர்மனுதாரர்களுக்கும் நேரடியாக 18.11.2024 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 19.11.2024.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:31:17 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் வருடம் நவம்பர் மாதம் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:31:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2024.11.04 14:31:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.02/2022 இன்

அ.வ.எண்.172/2014

தேதி.04.11..2024